மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிற நாட்களுக்கு சம்பளம் கிடையாது என்பது இந்த அரசு பின்பற்றி வருகிற கொள்கையாக, "10 work no p y" என்ற அடிப்படையிலே சம்பளம் தரப்பட மாட்டாது. அவர்கள் வேலைசெய்த நாட்களுக்குத்தான் அவர்கள் சம்பளத்திற்கு உரியவர்கள். அந்தக் கணக்கு இருந்தால், சம்பளத்தைத் தந்திருக்கலாம். ஆனால், கணக்கு நமக்கு வரவில்லை. வராததற்குக் காரணம், அத்தனைப் பேரும் வேலைநிறுத்தத்திலே இருப்பதால், அவர்கள் எந்தவிதமான விவரங்களையும் நம்முடைய கல்லூரி கல்வி இயக்குநரகத்திற்கு அனுப்பவில்லை. ஆகவே, பிரச்சினைக்குக் காரணமே, அவர்கள்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து கவன ஈர்ப்பு; திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை.

7. தன்னிலை விளக்கம்

(அ) 20—4—1993 ஆம் நாளன்று இம் அவையில் பேசியது பற்றி வானொலியில் செய்தி ஒலிபரப்பப்பட்டது குறித்து ஓர் உறுப்பினரின் தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993-94 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைமீது விவாதமும், வாக்கெடுப்பும், 20—4—1993 அன்று மாண்புமிகு...... (குறுக்கீடு).

திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. தென்னவன்.

*திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் காவல்துறை மானியத்தில் நான் உரையாற்றுகிறபோது, இன்றைய தமிழக வரலாற்றில் இடம் பெறக்கூடிய தகுதி, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு உண்டு என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஆத்திரத்தில் அவசரத்தில் இருக்கிற சில காங்கிரஸ் உறுப்பினர்கள் நான் பேசியதைப் புரிந்து கொள்ளாமல், எம்.ஜி.ஆர். வரலாற்றில் இடம் பெறவில்லையா என்று கேட்டார்கள். அதற்கு நான் விளக்கம் தெரிவிக்க விரும்புகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வாழ்ந்த காலத்தில், சரித்திரத்தைப் படைத்துவிட்டார். புரட்சித் தலைவர்

எம்.ஜி.ஆர். அவர்கள் இன்றைக்கு மறைந்து இருந்தாலும், பைசா நகரத்து சாய்ந்த கோபுரம், சாய்ந்தும் சாயாமல் நிலையாக இருப்பதைப்போல, அந்தத் தலைவன் மறைந்தாலும், மறைந்தும் மறையாமல் மக்கள் மனதிலே இன்றைக்கும் நீக்கமற நிறைந் திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தென்னவன், இது உங்களுடைய தன்னிலை விளக்கம் என்ற முறையிலா? அல்லது வேறுவகையிலா? தன்னிலை விளக்கம் என்றால் சொல்லுங்கள்; தன்னிலை விளக்கம் என்று சொல்லுங்கள்.

முற்பகல் 11-50

திரு. மு. தென்னவன் : தன்னிலை விளக்கம்தான். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மண்ணுக்குள் மறைந் தாலும் இன்றைக்கும் எங்கள் கண்ணுக்குள்தான் இருக்கிறார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்கு வரலாறு படைத்ததுபோல, அவர்கள் வழியிலே இன்றைக்கு நடைபோட் டுக்கொண்டு இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள், இன்றைக்கும் வரலாறு படைத்துக்கொண்டிருக்கிறார் என்றுதான் நான் குறிப் பிட்டேன். (மேலசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்கு படுத்துக்கொண்டே தொகு திக்குச் செல்லாமல், படுத்துக்கொண்டே ஜெயித்த வரலாறும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உண்டு. 1984ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் போது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ் மண்ணிலே இல்லை. இந்தத் தமிழ் நாடு இருக்கிற இந்தியத் துணைக் கண்டத்திலேயே இல்லை. இந்தியத் துணைக் கண்டம் இருக்கிற ஆசியா கண்டத்திலே இல்லை. ஆப்பிரிக்கா கண்டத்தையும், ஐரோப்பியக் கண்டத், தையும் தாண்டி, அமெரிக்கா கண்டத்திலே இருந்து கொண்டு பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு, கண்டம் விட்டுக் கண்டம் இருந்தாலும், வெற்றி பெற்ற வரலாறு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உண்டு. ஆகவே, அன்றைக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வாழ்ந்த காலத்தில் சரித்திரம் படைத்தது போல, வரலாற்றில் இடம் பிடித்ததைப் போல, இன்றைக்குத் தமிழக வரலாற்றில் இடம் பெறக்கூடிய தகுதி புரட்சித் தலைவி அவர்களுக்குத்தான் உண்டு என்று சொன்னேன் என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) அதுமாத்திரம் அல்ல, நேற்றைய தினம் நான் சொல்லாத கருத் துக்களைச் சொன்னதாக வானொலி செய்தியில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் பேட்டி கொடுத்ததாக ஒரு செய்தியைச் சொன்னார்கள். நான் அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட் டிருக்கிறேன். யாரையும் களங்கப்படுத்துகின்ற வகையிலே நான் பேசவில்லை. ஆனால், இல்லாத கருப்புப் பூனையை இருட்டு அறையில் தேடுவதைப் போல சொல்லாத வார்த்தைகளை வைத்து

1993 ஏப்ரல் 21] [திரு. மு. தென்னவன்]

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திசை திருப்புகின்ற வகையிலே புதிய அரசியல் உறவுக்கு அஸ்திவாரமாக, அரசியல் ஆதாயத்திற்காக, அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக, என்னைக் களங்கப்படுத்துகின்ற வகையிலே, நான் சொல்லாத வார்த்தைகளைச் சொல்லிக் களங்கப்படுத்துகிறார் என்பதையும் இங்கே நான் கோடிட்டுக் காட்டி அமைகிறேன்.

8. அவை நிகழ்ச்சிகளைப் பற்றி தவறாகத் தொலைக்காட்சியும் வானொலியும் செய்தி வெளியிடுவது குறித்தும் பேரவைத் தலைவர் அனுமதியின்றி 20—4—1993ஆம் நாளன்று அவைக்குள் தொலைக்காட்சி நிறுவனப் படமெடுப்பவர்கள் நுழைய முயற்சித்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தென்னவன் அவர்கள் தெரிவித்த கருத்தைப்போல, நேற்றைய தினம் அவர் எந்த வகையிலேயும், எவரையும் பற்றிக் குறிப்பிட்டு எந்த வாசகமும் எதுவும் இல்லை. அப்போதே சிலர் குறுக்கிட முற்பட்டபோது அவரே அதைத் தெளிவுபடுத்தி இருக்கிறார். நான் எந்தப் பெயரையும் உச்சரிக்கவில்லை என்று சொல்லிவிட்டு, அதையும் சொல்லியிருக்கிறார். அவ்வளவுக்கும் பின்னர், வானொலியும், தொலைக்காட்சியும், எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதாக இங்கே திரு. தென்னவன் அவர்கள் சொல்லாத, குறிப்பிடாத ஒரு பெயரை இணைத்து அவர்கள் செய்தி வெளியிட்டு இருப்பது என்பது மிகவும் கண்டிப்பதற்குரிய சம்பவம் ஆகும். அத்தகைய கண்டிப்பதற்குரிய செயலைச் செய்தி நிறுவனங்கள் செய்யாது இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, வானொலியும், தொலைக்காட்சியும் பெரும்பகுதி மக்கள் கேட்கிற, பார்க்கிற, நிறுவனங்களாக இருக்கின்ற காரணத்தால் இந்த பேரவையிலேயும் அவைகளின் சார்பில் இங்கே செய்தி சேகரிக்க வந்திருக்கிறவர்கள் இருக்கிறார்கள். இன்னொரு உறுப்பினர் ஒரு கருத்தை வெளியிலே போய்ச் சொல்லியிருந்தாலும், நீங்கள் இங்கே, காதாரக் கேட்டிருக்கிறீர்கள் நடந்த சம்பவம் இதுதான் என்றாவது சொல்லி இருக்க வேண்டும் அதையும் விடுத்து, இப்படிப்பட்ட ஒரு செய்தி இங்கே பேசப்பட்டது என்பது போலத் தோற்றத்தைக் கொடுக்க, செய்தி நிறுவனங்கள், குறிப்பாக, தொலைக்காட்சியும், வானொலியும் நேற்றைய தினம் முயன்று இருப்பது கண்டிக்கத்தக்கதாகும். இதைப்போன்ற செயல்களில் வானொலியும், தொலைக்காட்சியும் ஈடுபடலாகாது. அது இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும், ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையுடைய அமைப்பு என்பதை மறந்து விடலாகாது. யாருக்கோ சிலருக்குக் குத்தகை விடப்பட்ட அமைப்புக்கள் அல்ல என்பதையும் அவர்கள் உணர்ந்து செய்தியை வெளியிட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).